2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

**நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.** யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

மார்ச் மாத இதழ்



நான் உனக்குத்
**துணை**
நிற்கிறேன்.
ஏசாயா 41:13

I will
**HELP**
you.
ISAIAH 41:13

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்
Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | MAR |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

# இந்த மாத வாக்குத்தத்தம்

**'நான் உனக்குத் துணை நிற்கிறேன்.'**
**ஏசா41:13**

**வாக்குத்தத்த செய்தி:**

**"துணை நிற்கும் தேவன்"**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.மீண்டும் இந்த செய்தி மலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிகவும் சந்தோஷம்.

இந்த மாதம் தேவன் உங்களுக்கு துணையாக இருப்பதை அதிகம் காண முடியும்.

**1) உத்தமனுக்கு கர்த்தர் துணை: 2 நாளா 19:11**

தேவன் உத்தம குணத்தில் பிரியப்படுகிறார். யார் உத்தமமாக நடந்தாலும் தேவன் அவர்களுக்கு துணை நிற்பார். யோபு உத்தமன், தேவன் அவனுக்கு துணை நின்று இழந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய் திரும்ப கொடுத்தார். காலேப் உத்தமனாய் தேவனை பின்பற்றினான். எனவே தேவன் அவனுக்கு துணை நின்று மலை நாட்டை சுதந்தரிக்கச் செய்தார்.

**2) *கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கு தேவன் துணை: சங் 115:11***

யார் கர்த்தருக்கு பயந்து நடக்கிறார்களோ தேவன் அவர்களுக்கு துணையாய் இருப்பார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் கர்த்தருக்கு பிரியமாக வாழ்வார்கள். யோசேப்பு கர்த்தருக்கு பயப்படுகிறவனாக இருந்தபடியால் தேவன் யோசேப்புக்கு துணை நின்றார். அவனை உயர்த்தினார்.



**இதை வாசிக்கிறவர்களே! உத்தமமாய் கர்த்தருக்கு பயந்து வாழ்வீர்களானால் இந்த மாதம் கர்த்தர் உங்களுக்கு துணை நிற்பார்.**

**Rev. Dr. J. Samuel Jebaraj**



# கடனில் பலர் சிக்கிக்கொள்ளக் காரணங்கள் என்ன?

**ஆண்கள் பகுதி**

**நம் தேசமே கடனில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. கடனிற்கு வாங்கிய காரில், அரசாங்கம் கடனில் வாங்கிப்போட்ட சாலையில்தான் ஒவ்வோரு நாளும் அநேகர் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடனில்லாத வாழ்க்கையே நிம்மதியான ஆசிர்வாதமான வாழ்க்கையாகும். எனவே, கடனற்ற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே ஒவ்வோரு கர்த்தருடைய பிள்ளைகளின் இலக்காக மாற வேண்டும். கடனில் பலர் கிக்கிக்கொள்ளக் காரணங்கள் :**

## 1) அசட்டு தைரியம்:

இப்போழுது இருக்கிற பிரச்சனையை தீர்ந்தால் போதும். எதிர்காலத்தில் எப்படியாவது அடைத்துக் கொள்ளலாம் என்ற அசட்டு தைரியம் கடன்படத் தூண்டுகிறது.நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தொன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே.( யாக் 4:14)

## 2) ஆடம்பரம்:



வரவுக்கு மிஞ்சிய செலவு. கௌரவத்திற்காக செய்யும் செலவு, ஆடம்பரமான விழாக்களால் ஏற்படும் செலவுகளால் பலர் கடனுக்குள் தள்ளப்படுகிறார்கள். சிற்றின்பப்பிரியன் தரித்திரனாவான்; மதுபானத்தையும் எண்ணெயையும் விரும்புகிறவன் ஐசுவரியவானாவதில்லை. (நீதி 21:17)

## 3)அவசரம், அறியாமை, அவிசுவாசம்:

தேவன் ஏற்றவேளையில் தேவைகளை சந்திப்பார் என்று நம்பிக்கையோடு காத்திருக்காமல், கடன்வாங்கியாவது விரும்பியதை அடைய வேண்டும் என்ற இச்சையே பலர் கடனில் சிக்கக் காரணமாகி விடுகிறது. ஆகாயத்துப் பட்சிகளை... உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? (மத் 6:26)

## 4) சோம்பல் :



வேலைபார்க்க விருப்பமின்மை, கஷ்டமில்லாமல் வாழ வேண்டும் என்ற எண்ணம், இப்படியே ஒப்பேற்றி விடலாம் என்று உழைக்க சோம்பேறித் தனப்படுவதே அநேகரைக் கடனுக்குள் தள்ளுகிறது. தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண் விழித்திரு அப்போழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்.(நீதி 20:13)

## புருஷர் ஐக்கிய கூட்டம்

**திங்கட்கிழமை தோறும்**
**இரவு 8.00 -8.45 மணி வரை**

**இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..**



# நல்ல பங்கு

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா? இம்மட்டும் கர்த்தர் கிருபையாய் நம்முடைய ஜெபங்களையெல்லாம் கேட்டு அற்புதம் செய்து வருகிறார். இம்மட்டும் நம்மை கிருபையாய் நடத்தினவர், இனிமேலும் நடத்துவார். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். கைவிடவே மாட்டார். இந்த இதழில் நல்ல பங்கு எது எனப் பார்ப்போம்.

### 1) இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல்:



இயேசு தான் உண்மையானத் தெய்வம். ஜீவனுள்ளவர், ஜீவிக்கிறார். எனக்காகவே மரித்து உயிர்த்தெழுந்தவர் என இருதயத்தில் விசுவாசித்து, வாயினால் அறிக்கைப் பண்ணி, அவரை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் நல்ல பங்கைப் தெரிந்துக் கொண்டவர்கள்.காரணம், இயேசுவே தெய்வம், அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழே பூமியின் மேலே அவருடைய நாமமெயல்லாமல், வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. பெண்களே! இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களாய் நீங்கள் இருப்பீர்களானால் உங்கள் வாழ்வில் தோல்வி என்பது இல்லை. இயேசு ஜெயக் கிறிஸ்து, உங்களையும் ஜெயிக்கப்பண்ணுவார்.

### 2) இயேசுவின் பாதம்:



உலகில் வாழுகிற நாம் எத்தனையோ தேவைகளோடு, எதிர்பார்ப்புகளோடு தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நல்ல பங்காகிய இயேசுவின் பாதத்தை பற்றிக்கொண்டிருப்போமானால் தேவையற்ற பயங்கள்,வருத்தங்கள், கவலைகள், கலக்கங்கள் இல்லாமல் நம்பிக்கையுடன் வாழுகிற பாக்கியம் கிடைக்கும் காரணம் இயேசுவின் பாதத்தில் சந்தோஷம், சமாதானம், ஆறுதல் எதிர்பார்க்கிற நன்மைகள் அத்தனையும் உண்டு. பெண்களே, ஜெபிக்கின்ற பெண்களாய் நீங்கள் இருந்தால் உங்களை ஜெயிக்க எவரும் இல்லை.

### 3) வசனம்: (இயேசுவின் வார்த்தை)



வசனத்தை வாசிக்கிறவர்கள், கேட்கிறவர்கள், கைகொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். இயேசுவின் வார்த்தையில் ஜீவனும், வல்லமையும் உண்டு. வசனத்தை அனுப்பி குணமாக்குவேன் என்றவர், வசனத்தின் மூலம் கிடைக்கும் ஆறுதல் நம்பிக்கை, தைரியம், விசுவாசம், பிழைப்பு, ஞானம், அறிவு, புத்தி எல்லாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நல்ல பங்காகிய வசனத்தை வாஞ்சியுங்கள். வேதம் வாசிக்க நேரம் செலவிடுங்கள். கர்த்தர் உங்களோடு தெளிவாய் பேசுவார். பெண்களாகிய நீங்கள் ஜெயித்துக் கொண்டே இருப்பீர்கள்.


பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.



LIVE STREAMING

# சரீரத்தில் ஒழுக்கம்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்

கிறிஸ்துவுக்குள்ளான தம்பி தங்கைகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். நாம் வாழும் இந்த காலகட்டத்தின் ஆவிக்குரிய போராட்டங்களை மேற்கொள்ள எந்த அளவு வேத வசனம், ஜெபம், அபிஷேகம் அத்தியாவாசியமோ அதே அளவு ஒழுக்கம் மிக முக்கியம். மத்தேயு 7:22 இல் சொல்லப்பட்டுள்ளது போல, கன்மலை மேல் வீட்டைக்கட்டினால் நிலைநிற்கும். ஆனால் வீட்டை கட்டும் பணி என்பது மிக கவனமாக நம்மால் செய்யப்பட வேண்டிய ஒன்று. 1 கொரிந்தியர் 6:19,20 சொல்வது போல, நம் சரிரம் என்பது தேவன் தங்கும் ஆலயம். எந்த தூசும், அழுக்கும் அண்டாதபடி ஆலயத்தை பார்த்துக்கொள்வது போல, நம் சரீரத்தையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.



இன்டர்நெட் உபயோகம் பெருகிப்போன இந்த காலத்தில் உங்கள் உடலை எப்படி பார்த்துக்கொள்கிறீர்கள்? தேவைக்கு ஏற்ப, ஆரோக்கியமாக (பிரசங்கி 10:17) சாப்பிடுகிறீர்களா? அல்ல ருசிக்காக உண்பவரா நீங்கள்? உணவு சம்மந்தமான நிறைய இன்ஸ்டா ரீல்ஸ், யூ டியூப் வீடியோக்கள் பார்த்து அதில் ஆசை கொண்டிருந்தால், அதில் பலவும் ஆரோக்கியமானவை அல்ல என்றும், ருசிக்காகவும் உலகத்தில் உள்ள இதையெல்லாம் நானும் அனுபவித்து இருக்கிறேன் என்று உலகத்தோடு ஒத்துபோவதற்கான போஜனங்கள் தான் என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

சரியாக உடற்பயிற்சி (3 யோவான் 1:2) செய்பவரா அல்ல அப்படி ஒன்றே இல்லை என்பவரா? வீட்டிலேயே walking, exercises அல்லது வெளியில் jogging, swimming போன்றவை செய்யலாம். ஒரு சராசரி கல்லூரி, வேலைக்கு செல்லும் வாலிபருக்கு இது போதும். Gym ற்கு செல்வது அவசியமில்லை. அதில் பண விரயம், நேர விரயம், சில உளவியல் சம்மந்தமான பிரச்சனைகள் உள்ளன.

சரியான நேரத்திற்கு தூங்குகிறோமா அல்லது கண்கள் (மத்தேயு 6:22) பாதிப்பு உண்டாகும்படி phone பார்த்துக்கொண்டு இருக்கிறோமா? அதிக நேரம் Earphones போட்டுக்கொண்டு பல கதைகள் கேட்டு காதிற்கு (நீதி 15:31) பாதிப்பு உண்டாக்குகிறோமா? பயன்படுத்தும் நேரத்தைக் குறைத்துக்கொள்ள தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.

உடல் ஆரோக்கியத்திற்கும் மன ஆரோக்கியத்திற்கும் சம்பந்தம் உண்டு. 1 கொரிந் 9:26,27 சொல்வது போல உடலை நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கியம் தான் முக்கியமே தவிர, அலங்காரம் இல்லை (1 பேதுரு 3:3,4), மற்றவர்களுக்கு இடறல் ஆகாது இருப்பீர்களாக (மத் 18:6). GOD BLESS YOU...

ZOOM YOUTH FELLOWSHIP
FORWARDING ARMY
EVERY WEDNESDAY @ 9.00 PM
MEETING ID: 337 022 2215
PASSCODE: 1234
SCAN & JOIN



# உங்கள் பாவம் உங்களை பிடித்துக்கொள்ளும்

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

**சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**



*ஒரு கிராமத்தில் ராஜண்ணா, ராஜம்மா என்ற தம்பதிகள் தனக்கிருந்த கொஞ்ச நிலத்தில் விவசாயம் செய்து ஜீவித்து வந்தார்கள். ஒரு இரவு நேரத்தில் அவர்கள் புசித்து தூங்கப் போகும் வேளையில் உறவினர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். எருது வாங்க இரண்டு ஆயிரம் ரூபாய் கொண்டு வந்திருப்பதாகக் கூறினார். அந்த உறவினர் பிரயாணப்பட்டு வந்த சோர்வினால் நன்றாகத் தூங்கிவிட்டார். ஆனால், ராஜண்ணா, ராஜம்மா தம்பதிகளுக்கு தூக்கம் வரவில்லை. அந்தக்காலத்தில் அது ஒரு பெரிய தொகை. இரண்டு ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டார்கள். திருடன் வந்து திருடியது போல நாடகமாடினர்.*

  

*ராஜண்ணா, ராஜம்மா தம்பதிகளுக்கு வரிசையாக நான்கு பிள்ளைகள் ஊமையாகப் பிறந்தார்கள். பிள்ளைகளின் சுகத்திற்காக மருத்துவம் செய்தும், தேவதைகளை வணங்கியும் பலன் ஒன்றுமில்லை. கடைசியில் இயேசு சுகம் அளிப்பார் என அறிந்து கூட்டங்களுக்குச் சென்றார்கள். கூட்டம் முடிந்த பிறகு போதகரைச் சந்தித்து பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள் என்றனர். நீங்கள் ஏதாவது பாவத்தை மறைத்து வைத்துள்ளீர்களா? உங்களை நீங்களே ஆராய்ந்து பார்த்து அறிக்கையிட்டு அதை விட்டுவிடுங்கள் என்று போதகர் ஆலோசனை கூறினார். அந்த தம்பதிகள் தாங்கள் செய்த தவறை போதகரிடம் கண்ணீரோடு கூறினார்கள். அந்த மனிதனிடத்தில் பணத்தை வட்டியோடு அவர்களுக்கு திருப்பிக்கொடுத்து மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். 'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்துவிட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்' என்ற வசனத்தின்படி தேவன் அவர்களுக்கு இரக்கம் பாராட்டி நான்கு பிள்ளைகளும் பேசும்படி கிருபை செய்தார். அன்பான சிறுபிள்ளைகளே, பிறர் பொருள்மேல் ஆசை வைக்காமல் பாவத்திற்கு விலகி ஜீவியுங்கள். தேவன் தாமே பரிசுத்தமாய் வாழ உதவி செய்வாராக!*

**மனப்பாட வசனம்:**

**'குமாரன்(இயேசு) உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்'.யோவான் 8:36**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

CHILDREN'S TIME
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 37 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக
ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.1,87,100**

**பொறுப்பு: Bro. அர்னால்டு**



**Pr. Daniel Babu**
Gujarath



**Pr. Stephen Rathod**
Rajasthan



**Pr. Mandeep kidhay**
Moga



**Pr. Chaman Masih**
Ablowal



**Pr. Binu Vijayan**
Tripuri



**Pr. SawarGill**
Gurdaspur



**Pr. Peter Masig**
Taran Taram



**Pr. Sandeep Singh**
Chunnai Kalan



**Pr. Inderjit Singh**
Mohali



**Pr. Prasenjit Basumatary**
Assam



**Pr. Karthick**
Chandigarh



**Pr. Gurdial Singh**
Dehriwal Droga



**Pr. Rajkumar**
Kurali



**Pr. Rajesh**
Mahatpur



**Pr. Simson**
Karnataka



**Pr. Happy Masih**
Sarspur



**Pr. Jirma Lal**
Bazara



**Pr. Caleb**
Delhi



**Pr. Heral Kaddara**
Rajasthan



**Pr. Arionp Kumar**
Ajimar



**Pr. Kamal Deep**
Punjab



**Pr. Godson Joy**
Punjab



**Pr. Harjeet Kaur**
Nawashar



**Pr. Jaswinder Kumar**
Delhi



**Pr. Pritam Singh**
Rajasthan



**Pr. Sonu**
Makhu



**Pr. Patras Masih**
Feruyzepur



**Pr.Dhananjay Nokman**
Assam



**Pr. Jinod Rabha**
Assam



**Bro. Prakash**
Shalom Charity Trust



**Sis. Sugantha**
Shalom Charity Trust



**Bro. Joshua Bhuriya**
Shalom Charity Trust



**Sis. Karuna K. Damor**
Madhya Pradhesh

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Church, Pudukottai.
**Bank** : TMB
**A/c No.** : 035100050313093
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 10 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 17 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலெக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

- எனக்கு இருதய நோய் இருந்தது. மருத்துவர்கள் இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். பாஸ்டர், பாஸ்டரம்மா எனக்காக ஜெபித்தார்கள். அறுவை சிகிச்சை இல்லாமல் ஆஞ்சியோ மூலம் எனது இருதய நோய் சரியானது. தேவனுக்கே மகிமை...

  – Sis. தமிழ் செல்வி

---

- கடந்த ஏழு வருடமாக எனக்கு பகல் இரவாக தூக்கமே வராது. நான் தூங்குவதற்கு மாத்திரைகள் சாப்பிட்டேன். பாஸ்டரம்மாவிடம் சொல்லி ஜெபித்தேன். கர்த்தருடைய கிருபையினால் எனக்கு தேவன் நல்ல தூக்கத்தை தந்தார். பரிபூரண சுகமும் தந்ததால் பிரஷர் மற்றும் நீரழிவு நோய் எல்லாம் சரியாகிவிட்டது. தேவன் பரிபூரண விடுதலை தந்து விட்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக...

  – Sis. முத்தம்மாள், முருகன் நகர்

---

- எனது கணவர் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றிருந்தும், குடி மற்றும் பொடி போடுவது என்ற பாவ பழக்கத்திற்கு மீண்டும் அடிமையாகிவிட்டார். கடந்த மாதம் இரவு 12 மணிக்கு திடீரென்று வலிப்பு மாதிரி வந்து கஷ்டப்பட்டார். பக்கத்தில் உள்ளவர்களின் துணையோடு G.H இல் சேர்த்தோம். பாஸ்டரம்மா பயப்பட வேண்டாம் என்று சோல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புத சுகத்தை கொடுத்தார். மருத்துவர்கள் இனி குடிக்க கூடாது என்று கூறினார்கள். ஆனால் மீண்டும் 2 வாரங்கள் கழித்து குடித்தார்கள், எங்களுக்குள் பிரச்சனை வந்தது. நான் மிகவும் வேதனையோடு ஜெபித்தேன். 35 வருட குடிப்பழக்கத்திலிருந்து கர்த்தர் பரிபூரண விடுதலை கொடுத்தார். தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக...

  – Sis. சாராள் ஆபிரகாம், மேலக்கூட்டுடன் காடு

---

- என் மகனுக்கு உடம்பு சரி இல்லாமல் திடீரென்று ICU வில் சேர்த்தார்கள். MRI ஸ்கேன் எடுக்க சோன்னார்கள். மனம் உடைந்து போனோம். பாஸ்டர், பாஸ்டரம்மா மகனுக்காக ஜெபித்தார்கள்.MRI Normal ஆக வந்தது. அற்புத சுகம் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்...

  –Sis. ஸ்ரீஜா, பழையகாயல்


## A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349

விண்ணப்ப படிவம் QR Code இல் இணைக்கப்பட்டுள்ளது.

## அமாவாசை ஜெபம்

28 மார்ச் வெள்ளி

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. **சாந்தா**

**மார்ச்-2025**
**(யோனா - ஆபகூக்) அதிகாரம் வரை**
**(வசன இருப்பிடம் எழுதவும்)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | | | |
| | 3 | | | | | 4 |
| | | | | | | 5 |
| | | | | | | |
| 6 | | 7 | | | 8 | |
| | | 9 | | | 10 | |
| 11 | | | | 12 | | |

**வலமிருந்து இடம்**

01. எது வயல்வெளியைப் போல் உழுப்பட்டுபோம் என்கிறார்?
04. எது சுவரிலிருந்து கூப்பிடும் என்கிறார்?
09. யோனா தர்ஷீசுக்குப் போக எங்கே போய் கப்பல் ஏறினார்?
12. யோனா எது என்னைச் சூழ்ந்தது என்கிறார்?

**இடமிருந்து வலம்**

02. பொய்யான மாயையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் எதைப் போக்கடிக்கிறார்கள்?
10. யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற எதைப்போல இருப்பார்கள்?
11. இஸ்ரவேலில் மீதியானவர்களை எதின் ஆடுகளைப்போல் கூட்டமாக்குவேன் என்கிறார்?
12. யார் வீட்டாருடைய எல்லாச் செய்கைகளும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது என்கிறார்?

**மேலிருந்து கீழ்**

02. அவருடைய கரத்திலிருந்து எவைகள் வீசின?
03. எதிலே படுத்துக்கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாதே என்கிறார்?
05. எது உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும் என்கிறார்?

**கீழிருந்து மேல்**

06. யார் முட்செடிக் கொத்தவன் என்கிறார்?
07. இஸ்ரவேலுடைய நியாயாதிபதியை எதினால் கன்னத்தில் அடிப்பார்கள்?
08. நான் கேட்ட பொழுது என் எலும்புகளில் எது உண்டாயிற்று என்கிறார்?
12. தேவன் பூச்சிக்கு கட்டளையிட அது எந்தச் செடியை அரித்துப் போட்டது?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

## பரிசு பெறும் 5 நபர்கள்:

1) Sis. **கமலா ஜாய்ஸ்,** கட்டாலங்குளம்
2) Sis. **பவானி,** காமராஜ் நகர்
3) Sis. **ரோஸி,** அந்தோணியார்புரம்
4) Sis. **மெர்சி,** புதுக்கோட்டை
5) Sis. **எஸ்தர் சின்னத்துரை,** புதுக்கோட்டை

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name** : J. Samuel Jebaraj
**Bank** : ICICI - Bank
**A/c No.** : 613901506045
**IFC Code** : ICIC 0006139
**Branch** : Tuticorin

UPI ID:
**prjsjebaraj@okaxis**

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

04.03.2025 – செவ்வாய்கிழமை
**ஊழியர்கள் கூடுகை - திருநெல்வேலி**

07.03.2025 – வெள்ளிக்கிழமை
**முழு இரவு ஜெபம் - ஆலங்குளம்**

10.03.2025 – திங்கட்கிழமை
**பயிற்சி முகாம் - திருநெல்வேலி**

18.03.2025 – செவ்வாய்கிழமை
**முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி**

23.03.2025 – ஞாயிற்றுக்கிழமை
**ஆண்கள் முகாம் - V.K புதூர்**

25.03.2025 – செவ்வாய்கிழமை
**பொறுப்பாளர்கள் கூடுகை - தூத்துக்குடி**

26,27.03.2025 – புதன், வியாழன்
**போதகர் கருத்தரங்கு - மயிலாடுதுறை**

28.03.2025 – வெள்ளிக்கிழமை
**அமாவாசை ஜெபம் - பிரேயர் பார்க்**

30.03.2025 – ஞாயிற்றுக்கிழமை
**ஆண்கள் முகாம் - மதுரை**

# ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: 337 022 2215, PASSCODE: 1234

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**




எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349

ABOUT US

SCAN ME

To ..........................................................................................

..........................................................................................

..........................................................................................